மன்னிப்பு

பிதாவே! நான் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவனாய் உம்மிடம் வருகிறேன். நான் காயப்பட்டவனாய் உம்மிடம் வருகிறேன். நான் காயப்பட்டவனாய் இருதயத்தில் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள உம்மிடத்தில் வருகிறேன்.[1]

கசப்பினை என் உள்ளத்தில் அனுமதிக்கப்பட்டேன். ஏமாற்றங்கள், கோபம், எதிர்மறையான காரியங்கள் அனைத்தையும் என்னை விட்டுத் தவிர்க்கிறேன்.[2]

என்னுடைய மல்யுத்தம் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல. வானலோகத்துப் பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராடுகிறேன்.[3]

நான் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்படாமல் அதனை உம்மிடம் ஒப்படைக்கிறேன்.[4] ஆகவே, என்னைச் சபித்தவர்களை நான் மன்னித்து அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.[5]

நீர் மனதுருக்கமும், இரக்கமும் உள்ள தேவன்.[6]

இதனை உம்மிடத்திலிருந்து நான் கற்றுக்கொள்வதால் என் ஆத்துமா இளைப்படையும்.[1]

[1] மத்தேயு 11:29
[2] எபேசியர் 4:31
[3] எபேசியர் 6:12
[4] ரோமர் 12:19
[5] ரோமர் 12:14
[6] நெகேமியா 9:17

மத்தேயு 11:29

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

எபேசியர் 4:31

சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.

எபேசியர் 6:12

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

ரோமர் 12:19

பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

ரோமர் 12:14

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்.

நெகேமியா 9:17

அவர்கள் செவிகொடுக்க மனதில்லாமலும், அவர்களிடத்திலே நீர் செய்த உம்முடைய அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் அடிமைத்தனத்துக்குத் திரும்பும்படிக்கு அவர்கள் கலகம்பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்; ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au